பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
13 07 2024 **SATURDAY** 7 15**AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மும்பையில் சாலை, ரயில்வே, துறைமுகம் உள்ளிட்ட சுமார் 29 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.
- ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டு திட்டத்தின் பலன்கள் சமூகத்தில் அனைத்து பிரிவினருக்கும் கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்
- ஏழு மாநிலங்களுக்கு உட்பட்ட 13 சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.
- பிரிக்ஸ் நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்ற செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றுள்ள மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பல்வேறு நாடுகளின் சபாநாயகர்களை சந்தித்து பேசினார்.
- ஜூனியர் உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில், மகளிர் பிரிவில் இந்தியாவின் **Sabeera Haris** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**<<<<<<>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மும்பையில் சாலை, ரயில்வே, துறைமுகம் உள்ளிட்ட 29 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

ஒருநாள் பயணமாக இன்று மும்பை செல்லும் பிரதமர், கோரேகானில் **Nesco** கண்காட்சி மையத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இந்திய செய்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு செல்லவுள்ள அவர், அங்கு புதிய திட்டங்களையும் தொடங்கி வைக்கவுள்ளார்.

தானே - போரிவலி இடையே 16 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சுரங்கப்பாதை திட்டத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

இருவழி கொண்ட இந்த சுரங்கப்பாதை சஞ்சய்காந்தி காந்தி தேசிய பூங்காவிற்கு கீழே அமைக்கப்படவுள்ளது.

இது, மேற்கு அதிவிரைவுச் சாலையை நேரடியாக சென்றடையும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

சுமார் 12 கிலோமீட்டர் நீளத்திற்கு அமையவுள்ள இந்த சுரங்கப்பாதையில் தானே – போரிவலி இடையிலான பயணத்தை சுமார் ஒரு மணிநேரம் குறைக்கும்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள கோராகான் - முல்லண்ட் இணைப்புச் சாலை திட்டத்தின் சுரங்கப்பாதை பணிகளுக்கும் அடிக்கல் நாட்டவுள்ளார்.

லோக்மான்ய திலக் ரயில் நிலையத்தில் புதிய நடைபாதைகள் மற்றும் வசதிகளையும் பிரதமர் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கிறார்.

<<<<<<>>>><<<<<

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டு திட்டத்தின் பலன்கள் சமூகத்தில் மருத்துவ உதவி பெறமுடியாத நிலையில் உள்ள அனைவருக்கும் கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்திட்டம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பாக நேற்று புதுதில்லியில் தேசிய சுகாதார ஆணையத்தின் அதிகாரிகளிடம் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

இந்த திட்டங்களின் நோக்கங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருவதாகவும், நேற்றைய நிலவரப்படி நாடுமுழுவதும் 34 கோடியே 7 லட்சம் சுகாதார காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 7 கோடியே 35 லட்சம் பேர் இத்திட்டத்தின் கீழ், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு, ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>><<<<<

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

காலை எட்டு மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

முதலில் அஞ்சல் வாக்குகளும், அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படும்.

இந்த வாக்கு எண்ணிக்கை 20 சுற்றுகளாக நடைபெறவுள்ளது.150-க்கும் மேற்பட்டோர் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையத்தில் சுமார் ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றும் மத்திய துணை காவல் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதைத்தவிர, 6 மாநிலங்களுக்கு உட்பட்ட 12 சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படவுள்ளன.

மேற்கு வங்கத்தில் நான்கு மக்களவைத் தொகுதிகளிலும், ஹிமாச்சலப்பிரதேசத்தில் சட்டப்பேரவை தொகுதிகளிலும், உத்தராகண்ட்டில் இரண்டு தொகுதிகளிலும், பீகார், மத்தியப்பிரதேசம், மற்றும் பஞ்சாபில் தலா ஒரு தொகுதியிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது.

<<<<<<>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகி வரும் தடகள வீரர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகி வரும் இந்திய அணியினருக்கு செய்து தர வேண்டிய வசதிகள் தொடர்பாக, இந்திய ஒலிம்பிக் சங்கம், இந்திய விளையாட்டு ஆணைய உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

விளையாட்டுத் துறையில், அனைத்து அமைப்புகளும் ஒருங்கிணைந்து பணியாற்றி, பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு செல்லும் இந்திய தடகள வீரர் மற்றும் வீராங்கனைகள் அனைவருக்கும் தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>><<<<<

பிரிக்ஸ் நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்ற செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றுள்ள மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பல்வேறு நாடுகளின் சபாநாயகர்களை சந்தித்து பேசினார்.

நேற்று, தஜிகிஸ்தான், கஜகஸ்தான், பெலாரஸ், எகிப்து, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற சபாநாயகர்களை அவர் சந்தித்துப் பேசினார்.

அப்போது, இந்தியாவுக்கும், இந்நாடுகளுக்கும் நீண்டகாலமாக நிலவும் வரலாற்றுப்பூர்வ மற்றும் கலாச்சார ரீதியிலான தொடர்புகளை அவர்களுடன் மக்களவைத் தலைவர் பகிர்ந்து கொண்டார்.

இந்நாடுகளுடன் நாடாளுமன்ற நட்புறவு குழுக்களை ஏற்படுத்தி, நாடாளுமன்ற செயல்பாடுகளை செழுமைப்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்யலாம் என்ற யோசனையையும், இந்த சந்திப்பின் போது திரு. ஓம் பிர்லா எடுத்துரைத்தார்.

சர்வதேச விவகாரங்களில் இந்தியாவுடன் ஒத்துழைத்து செயல்பட அந்நாடுகள் விருப்பம் தெரிவித்தன.

<<<<<<>>>><<<<<

தமிழகத்தில் ஜவுளித் துறையில் முதலீடு செய்ய தைவான் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற தைவான் முதலீட்டாளர்கள், தமிழகத்தில் ஜவுளித்துறையில் முதலீடு ஆர்வம் காட்டியதாகவும், இதன் தொடர்ச்சியாக 10 பேர் கொண்ட தைவான் பிரதிநிதிகள் குழு கோவையில் நூற்பாலைகளை சமீபத்தில் பார்வையிட்டதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஜவுளி உற்பத்திக் கூடங்களில் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதில், கூட்டாக செயல்படுவது குறித்தும், அதற்கான வாய்ப்புகள் குறித்து தைவான் குழுவினர் ஆய்வு செய்ததாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

தைவான் குழுவினர், நேற்று சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை, சிறு குறு, நடுத்தர தொழில்துறை மற்றும் தொழில்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>><<<<<

கர்நாடகாவிலிருந்து காவிரி நீரை பெற்றுத்தர தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

காவிரியில் நாளொன்றுக்கு ஒரு டிஎம்சி வீதம் இம்மாதம் 31ஆம் தேதிவரை தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று காவிரி ஒழுங்காற்றுக் குழு பிறப்பித்த உத்தரவை கர்நாடக அரசு ஏற்க மறுப்பது கண்டனத்திற்குரியது என்றும் அவர் சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>><<<<<

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவை கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை கேட்டுக் கொண்டுள்ளார்.

குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை திறக்கப்படாததன் காரணத்தால், டெல்டா விசாயிகள் நிலத்தடி நீரை பயன்படுத்தி கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக அரசு இம்மாத இறுதிவரை நாளொன்றுக்கு ஒரு டிஎம்சி வீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவை அம்மாநில அரசு ஏற்க மறுப்பது சரியல்ல என்றும் அறிக்கை ஒன்றில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்களுக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், குவஹாத்தி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி தொடர்பான பிரதமரின் தொலைநோக்கு பார்வையை செயல்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான ஒதுக்கீடு 24 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து, 82 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநிலங்களில் உள்கட்டமைப்பு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, புத்தாக்க தொழில்கள், சுற்றுலா வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>><<<<<

பொதுவாக பள்ளி செல்ல குழந்தைகள் தயக்கம் காட்டுவார்கள்.

ஆனால், திருப்பூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் செய்யப்பட்டுள்ள புதிய வசதிகள் காரணமாக, மாணவர்கள் பள்ளிக்கு செல்ல மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

( வாய்ஸ் பைட் - சபரிஷ் 50 செகண்ட்ஸ்)

<<<<<<>>>><<<<<

ஜூனியர் உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில், மகளிர் பிரிவில் இந்தியாவின் **Sabeera Haris** வெண்கலப்பதக்கம் வென்றார்.

இத்தாலியின் **Porpetto-** வில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் இப்பதக்கத்தை அவர் பெற்றார்.

**<<<<<<>>>><<<<<**